www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# துளிரின் தொடக்கம்



தமிழ் வாசிக்க மற்றும் எழுதிப் பழக
ஓர் எளிய வழிகாட்டி

அனைவருக்கும் கல்வி இயக்கம்
சேலம் மாவட்டம்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**அன்பார்ந்த ஆசிரியர்களே,**

சேலம் மாவட்ட அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பாக வணக்கங்களும் வாழ்த்துகளும்.

சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களில் மாணவர்களின் அடைவுத்திறன் ஆகஸ்ட் 2013-ல் மதிப்பீடு செய்யப்பட்டது. அடைவுத்திறனில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு செயல்திட்டம் (Action Plan), நுண்ணிலை செயல்திட்டம் (Micro Plan) வகுத்து பயிற்சியளிக்கப்பட்டு, நவம்பர் 2013-ல் மீண்டும் அடைவுத்திறன் மதிப்பீடு செய்யப்பட்டது.

இம்மதிப்பீட்டில் மாணவர்களின் அடைவுத்திறனில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. இரண்டாம் அடைவுத்திறன் மதிப்பீட்டிலும் படித்தல், எழுதுதல் திறன்களில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு எளிமையான முறையில் பயிற்சியளித்து அவர்களும் வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன்களில் முன்னேற்றம் பெறும் வகையில் இக்கட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் பள்ளிக்குக் கிளம்பும்போது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது:**

“நூறு மாணவர்கள் தங்களை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இவர்கள் என்னிடம் கற்றுக்கொள்பவைதான் நாளை இவர்களை நாட்டின் பொறுப்புள்ள ஆசிரியர்களாகவோ, அதிகாரிகளாகவோ, விஞ்ஞானிகளாகவோ, மருத்துவர்களாகவோ, பொறியாளர்களாகவோ, சமூக சேவகர்களாகவோ உருவாக்கப் போகின்றன. இவர்களின் எதிர்காலமே என் கையில் தான் அடங்கியுள்ளது. அதே போல, நான் மாணவர்களிடம் கற்றுக்கொள்பவைதான் என்னை மேலும் சிறந்த ஆசிரியனாக மாற்றப் போகின்றன. **எங்களுடைய சந்திப்பு பயனுள்ளதாக, உயிரோட்டமானதாக அமையட்டும்.**”

இந்தக் கண்ணோட்டத்தோடு கல்வி நிலையத்திற்குச் சென்றால், நமது பணி சுமையாக இராது, மாறாக, மனநிறைவும் பெருமகிழ்ச்சியும் அளிக்கக் கூடிய பணியாக மாறிவிடும்.

## தமிழ் எழுத்துகள்

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

## தமிழ் எழுத்துகள்

| * | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | ரீ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

**கட்டகத்தின் அமைப்பு :**

1. எழுத்து வரிசைகள் ஒவ்வொன்றாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.
2. அறிமுகம் செய்யப்பட்ட எழுத்துகளைக் கொண்டே சொற்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
3. வாசிக்கும் பொழுது பெரும்பாலான மாணவர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகள் உணரப்பட்டு, அவற்றை உடனுக்குடன் சரி செய்வதற்குத் தேவையான பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.
4. தேவையான இடங்களில் பயிற்சிகள் மற்றும் மதிப்பீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.
5. மாணவர்களின் பயிற்சி நிலையைப் பதிவு செய்ய அடைவுநிலை அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.
6. இக்கட்டகத்தில் பயிற்சிக்காக ஏறத்தாழ 1500 சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆசிரியருக்கான குறிப்புகள்** :

- கட்டகத்தில் உள்ள எழுத்துகள் மற்றும் சொற்களைப் **படித்தல், எழுதுதல்** ஆகிய இரண்டு திறன்களுக்கும் பயன்படுத்திக் கொள்ளவும்.
- எழுத்துகளை அறிமுகப்படுத்தும் பொழுதே சரியான உச்சரிப்புடன் அறிமுகப்படுத்தவும்.
- நெடில் எழுத்துகளை உச்சரிக்கும் பொழுது தலையைச் சாய்த்து ஒலிக்கும் அடையாளத்தை மாற்றி, எழுத்தை நீட்டி ஒலிக்கும் முறையைப் பழக்கவும்.
- எழுத்துக் கூட்டி படிக்கும் பொழுது ஒவ்வொரு எழுத்தையும் நிறுத்தி நிறுத்திச் சொல்லாமல், தொடர்ந்து சொல்லி முழு வார்த்தையையும் படிக்கப் பழக்கலாம்.
- முதலில் உள்ள சில எழுத்து வரிசைகள் தெரிந்த மாணவர்களுக்கு தெரியாத வரிசையிலிருந்து பயிற்சியைத் தொடங்கவும்.
- ஒவ்வொரு வரிசை எழுத்துகளையும் தெளிவாக கற்ற பின்னரே மாணவர்களுக்கு அடுத்த வரிசை எழுத்துகளை அறிமுகம் செய்யவும்.
- மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க கால அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. விரைவாக பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அடுத்தடுத்த நிலை பயிற்சிகளைக் கொடுக்கவும்.

- கட்டகத்தில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு முறைகளை வேறு எழுத்து மற்றும் சொற்களுக்கும் மாற்றிப் பயன்படுத்திக் கொள்ளவும். ஆசிரியர் பல்வேறு மதிப்பீட்டு முறைகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும் பொழுது எளிய முறையிலான செயல்வழிக் கற்றல் அட்டைகள் மற்றும் பாடப் புத்தகத்தையும் பயன்படுத்திக் கொள்ளவும். (சின்னங்களின் பெயர், அட்டை எண் கொடுக்கப்பட்டுள்ளது)
- சொற்களை எழுதும் பொழுது ஒவ்வொரு எழுத்தாக சொல்லிக்கொண்டே எழுத பயிற்சியளிக்கவும்.
- ஒவ்வொரு பயிற்சிக்குப் பின்பும் மாணவனை மதிப்பிட அந்த வரிசைக்குரிய எழுத்துகளை செய்தித்தாளில் வட்டமிடவும், படிக்கவும் கூறலாம்.
- தேவையான இடங்களில் சொல்வதை எழுதும் பயிற்சியளிக்கவும்.
- கட்டகத்தை நிறைவு செய்த பின் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் சிறு சிறு பத்திகள், குட்டிக் கதைகள் மற்றும் வருணனைகளையும் படிக்கச் செய்யலாம்.

**“வருங்கால இந்தியாவை**
**வகுப்பறையில் உருவாக்குவோம்”**

நன்றி.

அனைவருக்கும் கல்வி இயக்கம்,
சேலம் மாவட்டம்.

**தொடர்ந்து கற்போம்!**

**உயர்ந்து நிற்போம்!**

## வாசித்துப் பழகு

**வருணனை :**

### மலையருவி

மரங்கள் அடர்ந்த மலையில் அருவி மேலிருந்து கொட்டிக் கொண்டிருந்தது. அருவியின் ஒலியும், பறவைகளின் கீச்சென்ற ஒலிகளும் காதுகளுக்கு விருந்தளித்தன. குதித்தோடிய அருவி நீர் கண்ணாடி போல மின்னியது. அருவியின் சாரல் புகை போல மலர்களில் படர்ந்து நிறைந்தது. இதைக் கண்ட சிறுவர்கள் உற்சாகம் பொங்க துள்ளிக் குதித்தனர்.

**கதை படிப்போம் :**

### நிழலுக்கு நன்றி

அது ஒரு கடுமையான கோடைகாலம். வெயில் சுட்டெரித்தது. புழுதி படிந்த சாலையில் இரண்டு நண்பர்கள் சென்று கொண்டிருந்தனர். வழி நெடுகிலும் ஒரு மரத்தைக் கூட காணவில்லை. இருவரும் நிழல் தேடி நீண்ட தொலைவு நடந்து சென்றனர். அங்கே அகன்ற இலைகளைக் கொண்ட, குடை போல விரிந்த ஒரு மரத்தைக் கண்டனர். மரநிழலில் தங்கி சற்றே இளைப்பாறினர். சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு அவர்களில் ஒருவன், “இது ஒரு பயனற்ற மரம். சாப்பிட ஒரு பழத்தைக் கூட காணவில்லை” என்று நண்பனிடம் கூறினான்.

அவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த மரம், அவர்களைப் பார்த்து, “என்னுடைய நிழலிலேயே தங்கி இளைப்பாறிக் கொண்டு சிறிதும் கூட நன்றியில்லாமல் என்னையே குறை கூறுகிறீர்களே!” என்று கேட்டது. நண்பர்கள் இருவரும் தங்கள் தவறை உணர்ந்ததோடு மரத்திற்கு நன்றி கூறினர்.

## படித்துப் பழகு, எழுதி பழகு

| | | | |
|---|---|---|---|
| ஜனம் | ஜனனம் | ஜலசந்தி | ஜானகி |
| ஜலம் | ஜன்னல் | ஜவ்வரிசி | ஜாதகம் |
| ஜவுளி | ஜம்பம் | ஜாடை | ஜாடி |
| ஜமீன் | ஜல்லி | ஜாங்கிரி | ஜாலம் |

| | | | |
|---|---|---|---|
| ஜோடி | ஜீவநதி | ஜில்லா | ஜிலேபி |
| ஜோதி | ஜீவனம் | ஜீரணம் | ஜீவகன் |
| கஜம் | ரோஜா | ஜெகம் | ஜடாமுடி |
| ஜாமம் | ஜிமிக்கி | ஜூலை | ஜெகன் |

| | | | |
|---|---|---|---|
| ஸ்தலம் | ஸ்பரிசம் | ஸ்தூபி | ஸ்தானம் |
| ஸ்நானம் | ஸ்நேகம் | ஸ்வாதி | ஈஸ்வரன் |
| ஸ்வரம் | ஆகஸ்ட் | ஸ்தாபனம் | பாஸ்கர் |

| | | | |
|---|---|---|---|
| புஷ்பம் | கஷ்டம் | உஷா | ஷில்வியா |
| ஷோபனா | ஷீரடி | ஷெல்லி | ஷேமம் |

| | | |
|---|---|---|
| ஜென்மம் | இராஜராஜன் | ஜனாதிபதி |
| ஜோடணை | ஜோஸ்யர் | இராஜேந்திரன் |
| ஜலதரங்கம் | ஜாக்கிரதை | ராஜாங்கம் |

| | | |
|---|---|---|
| ஹரி | ஹரிஹரன் | ஹஸ்தினபுரம் |
| ஹார்மோனியம் | சுஹாசினி | ஹிமாலயம் |
| ஹிந்தி | அஹிம்சை | ஹோமம் |

| | | |
|---|---|---|
| ஜஹாங்கீர் | ஹர்ஷா் | ஹுமாயூன் |
| ஜலதோஷம் | ஹிந்துஸ்தானி | சூரஸம்ஹாரம் |

| | | |
|---|---|---|
| ஸ்ரீசைலம் | ஸ்ரீபெரும்புதூர் | ஸ்ரீராமன் |

## கால அட்டவணை

| வ. எண் | கற்பித்தல் அளவு | பக்க எண் | கால அளவு |
|---|---|---|---|
| 1. | **உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள்**<br>அறிமுகம்<br>மதிப்பிடல்<br>குறைதீர் கற்பித்தல் | 1 – 2 | ஒரு வாரம் |
| 2. | **உயிர் மெய்யெழுத்துகள் (அ, ஆ வரிசைகள்)**<br>அறிமுகம்<br>பயிற்சி | 3 – 9 | ஒரு வாரம் |
| 3. | **உயிர் மெய்யெழுத்துகள் (இ, ஈ வரிசைகள்)**<br>அறிமுகம்<br>பயிற்சி | 10 – 14 | ஒரு வாரம் |
| 4. | **உயிர் மெய்யெழுத்துகள் (அ - ஈ வரிசைகள்)**<br>மதிப்பிடல்<br>குறைதீர் கற்பித்தல் | 15 – 18 | ஒரு வாரம் |
| 5. | **உயிர் மெய்யெழுத்துகள் (உ, ஊ வரிசைகள்)**<br>அறிமுகம்<br>பயிற்சி | 19 – 25 | ஒரு வாரம் |
| 6. | **உயிர் மெய்யெழுத்துகள் (எ – ஏ வரிசைகள்)**<br>அறிமுகம்<br>பயிற்சி | 26 – 29 | ஒரு வாரம் |
| 7. | **உயிர் மெய்யெழுத்துகள் (அ – ஏ வரிசைகள்)**<br>மதிப்பிடல்<br>குறைதீர் கற்பித்தல் | 30 – 32 | ஒரு வாரம் |
| 8. | **உயிர் மெய்யெழுத்துகள் (ஐ – ஔ வரிசைகள்)**<br>அறிமுகம்<br>பயிற்சி | 33 - 42 | இரண்டு வாரங்கள் |
| 9. | **உயிர் மெய்யெழுத்துகள் (அ – ஔ வரிசைகள்)**<br>மதிப்பிடல்<br>குறைதீர் கற்பித்தல் | 43 – 50 | ஒரு வாரம் |
| 10. | **மயங்கொலி சொற்கள்**<br>**(ல, ழ, ள – ர, ற – ண, ன)**<br>பயிற்சி | 51 – 56 | ஒரு வாரம் |
| 11. | **வடமொழி எழுத்துகள், சொற்கள்**<br>**(ஸ, ஷ, ஜ, ஹ, ஸ்ரீ)**<br>பயிற்சி | 57 – 59 | ஒரு வாரம் |

## உயிர் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ |
| உ | ஊ | எ | ஏ |
| ஐ | ஒ | ஓ | ஔ |

**கீழுள்ள எழுத்துகளைப் படி:**

அ ஐ ஈ ஏ

ஒ உ ஆ ஔ

இ எ ஓ ஊ

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

## வட மொழிச் சொற்களைப் படித்துப் பழகு:

குஜராத் ஜப்பான் ரோஜா

இராஜாஜி ஜுன் நேதாஜி

ஜெயம் மும்தாஜ் ஜிலேபி

புஷ்பா சுபாஷ் ஷண்முகம்

கிருஷ்ணன் காஷ்மீர்

சர்க்கஸ் சந்திரபோஸ் அஸ்ஸாம்

கிறிஸ்துமஸ் இராமேஸ்வரம்

ஜஹாங்கீர் ராஜஸ்தான் தாஜ்மஹால்

ஜவஹர் ஜெய்ஹிந்த் ஷாஜஹான் ஹர்ஷா

ஸ்ரீதர் தேவிஸ்ரீ

ஸ்ரீரங்கம் ராஜஸ்ரீ

ஸ்ரீதேவி மதுஸ்ரீ

ஸ்ரீபிரியா சுபாஸ்ரீ

## வட மொழி எழுத்துகள்

ஸ்ரீ

| | | | |
|---|---|---|---|
| ஸ | ஸா | ஸி | ஸீ |
| ஸு | ஸூ | ஸெ | ஸே |
| ஸை | ஸொ | ஸோ | ஸௌ |

| | | | |
|---|---|---|---|
| ஜ | ஜா | ஜி | ஜீ |
| ஜு | ஜூ | ஜெ | ஜே |
| ஜை | ஜொ | ஜோ | ஜௌ |

| | | | |
|---|---|---|---|
| ஷ | ஷா | ஷி | ஷீ |
| ஷு | ஷூ | ஷெ | ஷே |
| ஷை | ஷொ | ஷோ | ஷௌ |

| | | | |
|---|---|---|---|
| ஹ | ஹா | ஹி | ஹீ |
| ஹு | ஹூ | ஹெ | ஹே |
| ஹை | ஹொ | ஹோ | ஹௌ |

## மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் |
| ட் | ண் | த் | ந் |

| | | | | |
|---|---|---|---|---|
| ப் | ம் | ய் | ர் | ல் |
| வ் | ழ் | ள் | ற் | ன் |

கீழுள்ள எழுத்துகளைப் படி:

| | | | | |
|---|---|---|---|---|
| ய் | ந் | ர் | ஞ் | ழ் |
| ட் | க் | ள் | ம் | ற் |
| ன் | ப் | ண் | ங் | ல் |
| | ச் | வ் | த் | |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

## உயிர் மெய் எழுத்துகள்

**அ - வரிசை எழுத்துகள்**

| | | | |
|---|---|---|---|
| க | ங | ச | ஞ |

| | | | |
|---|---|---|---|
| ட | ண | த | ந |

| | | | | |
|---|---|---|---|---|
| ப | ம | ய | ர | ல |

| | | | | |
|---|---|---|---|---|
| வ | ழ | ள | ற | ன |

**கீழுள்ள எழுத்துகளைப் படி:**

| | | | | |
|---|---|---|---|---|
| ஞ | ம | ந | ல | ட |
| வ | க | ற | ங | ன |
| ள | ண | ழ | ப | ய |
| | த | ர | ச | |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

✓ லாபத்தில் **அரை**ப்பங்கு கிடைத்தது.
✓ இரண்டு **அறை** கொண்ட கட்டடம்.

**ண, ன - வேறுபாடு அறிதல்**

- சுவரில் **ஆணி** அடித்தான்.
- ஆடிக்கு முன் **ஆனி** மாதம்.

➢ சிக்கனம் தேவை இக்**கணம்**.
➢ கொடிக்கு காய் **கனம்** இல்லை.

- வெயில் **தணி**ந்தது.
- **தனி** மரம் தோப்பாகாது.

➢ வில்லில் **நாண்** பூட்டினான்.
➢ **நான்** பாடம் படித்தேன்.

- மல்லிகை **மணம்** வீசியது.
- மகிழ்ச்சியில் **மனம்** நிறைந்தது.

**உரிய எழுத்தைத் தேர்ந்தெடு :**

1. மா……. முழுதும் விளையாட்டு. (லை / ளை)
2. பஞ்சவர்ணக்கி….. அழகாக இருக்கும். (லி / ளி)
3. பெயர்ப் பலகை வ….. காட்டும். (ளி / ழி)
4. பா….. மேல் நின்று பார்த்தான். (ரை / றை)
5. இராமன் வேலையை அ…. நாளில் முடித்தான். (ரை / றை)
6. ஆ……யின் முனை உடைந்தது. (னி / ணி)
7. அதிகாலையில் ப….ப்பொழிவு அதிகம். (னி / ணி)

- ○ கிளியின் **அலகு** சிவப்பு.
- ○ முயல் குட்டி மிகவும் **அழகு**.

காயம் பட்டதால் **வலி** ஏற்பட்டது.
பள்ளிக்குச் செல்லும் **வழி**.
பூமியைச் சுற்றி உள்ளது **வளி** மண்டலம்.

- ○ **காலை**யில் எழுந்தேன்.
- ○ **காளை** வண்டி இழுத்தது.

குரங்கின் **வால்** நீளமானது.
நாம் பூமியில் **வாழ்**கிறோம்.
**வாள்** கொண்டு வெட்டினான்.

**ர, ற - வேறுபாடு அறிதல்**

- ✓ அம்மா காய்கறி **அரி**ந்தார்.
- ✓ நல்ல கருத்துகளை **அறி**ந்து கொள்.

- ❖ உயிர்களிடத்தில் **இரக்கம்** காட்டு.
- ❖ மலைப்பாதை ஏற்ற **இறக்கம்** உடையது.

- ✓ **உரை**நடையைப் படித்தேன்.
- ✓ அஞ்சல் **உறை** வாங்கி வந்தேன்.

- ❖ அடுப்பு **எரி**ந்தது.
- ❖ பந்தை **எறி**ந்தான்.

- ✓ ஏரிக்**கரை** உடைந்தது.
- ✓ சட்டையில் **கறை** படிந்தது.

- ❖ ஊசி **கூரிய** முனையுடையது.
- ❖ வள்ளுவர் **கூறிய**து வாழ்விற்குரியது.

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| அகல் | அனல் | அப்பளம் |
| அடம் | அப்பம் | அரசன் |
| அரம் | அகலம் | அழகன் |
| அவர் | அஞ்சல் | அன்னம் |
| அவள் | அண்ணன் | அத்தர் |
| ஆண் | ஆழம் | ஆர்வம் |
| ஆள் | ஆடல் | ஆலயம் |
| ஆம் | ஆட்டம் | ஆய்தம் |
| இடம் | இமயம் | ஈசல் |
| இதழ் | இதயம் | ஈசன் |
| இவர் | இல்லம் | ஈயம் |
| இவள் | இன்பம் | ஈரம் |
| இவன் | ஈமம் | ஈதல் |
| உடல் | உரம் | உலகம் |
| உரல் | உயரம் | உள்ளம் |

**குறிப்பு:** *ஆசிரியர் ஒவ்வொரு சொல்லாகக் கூறி மாணவர்களை எழுத்துக் கூட்டி சொல்லச் செய்யலாம். இது எழுத்துப் பயிற்சிக்கு உதவும்.*

### படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | |
|---|---|---|
| ஊர் | ஊதல் | ஊட்டம் |
| ஊசல் | ஊனம் | ஊஞ்சல் |
| எண் | என் | எண்ணம் |
| ஏர் | என்ன | ஏற்றம் |
| ஏன் | எச்சம் | ஏப்பம் |
| எள் | எய்தல் | எவ்வனம் |
| ஐவர் | ஐயம் | ஐயன் |
| ஒட்டகம் | ஓரம் | |
| ஓடம் | ஓட்டம் | |
| ஓணம் | ஔடதம் | |
| கல் | கற்றல் | கம்பம் |
| கடன் | கட்டம் | கம்மல் |
| கடல் | கந்தன் | கன்னம் |
| கரம் | கப்பல் | கரகம் |
| சமம் | சட்டம் | சத்தம் |
| சரம் | சங்கம் | சக்கரம் |

### மயங்கொலிச் சொற்கள்

*(ஒலி வேறுபாட்டை அறிந்து படி)*

**ல, ழ, ள - வேறுபாடு அறிதல் :**

கடலில் **அலை** வீசியது.
நான் நண்பனை **அழை**த்தேன்.

- வாழை **இலை**யில் சாப்பிட்டேன்.
- நூல் **இழை** கொண்டு துணி நெய்கிறோம்.
- உணவு குறைந்ததால் உடல் **இளை**த்தது.

**உலை** கொதித்தது.
**உழை**ப்பே உயர்வு.

- மணி **ஒலி**த்தது.
- வறுமையை **ஒழி**ப்போம்.
- **ஒளி** வந்ததால் இருள் நீங்கியது.

ஓவியக் **கலை**யில் சிறந்தவன்.
மூங்கிலை **கழை** என்றும் கூறலாம்.
வயலில் **களை** எடுத்தார்கள்.

- காகிதத்தைக் **கிழி**த்தான்.
- பச்சைக் **கிளி** பறந்தது.

**தலை** வணங்கினான்.
பயிர் **தழை**த்து வளர்ந்தது.

- மீன் பிடிக்க **வலை** வீசினான்.
- பாதை **வளை**ந்து சென்றது.

**வெல்லம்** இனிப்பானது.
ஆற்றில் **வெள்ளம்** வந்தது.

**ழு**

புழுக்கம் - ஒழுக்கம்
அழுகை - தொழுகை
கொழுப்பு - பழுப்பு
எழுத்து - கழுத்து
பொழுது - விழுது

குழு - புழு - விழு - எழு - ஏழு

**தெளிவாக உச்சரித்துப் பழகு :**

| | | | | |
|---|---|---|---|---|
| கூழ் | சுழற்சி | பழமொழி | கழுகு | அழைப்பிதழ் |
| யாழ் | கழகம் | செழிப்பு | அழுக்கு | நுழைவு |
| சீழ் | கிழக்கு | வழிபாடு | அழுத்தம் | ஏழை |

| | | | | |
|---|---|---|---|---|
| அமிழ்து | குழப்பம் | நாழிகை | புகழுரை | உழைப்பாளி |
| ஏழ்மை | மழலை | மார்கழி | தழும்பு | பழைய |
| மூழ்கு | தாழம்பூ | தமிழிசை | விழுப்புரம் | வாழைப்பழம் |

| | | | |
|---|---|---|---|
| ஆழ்துளை | குழந்தை | தாழிசை | ஏழுமலை |
| கவிழ்தல் | பழங்கள் | ஊழியர் | தொழுநோய் |
| சூழ்நிலை | முழங்கை | தொழிலாளி | புழுதி |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

தனம் தங்கம் தட்டம்
தகரம் தச்சர் தந்தம்

நகம் நலம் நகரம்
நபர் நகர் நண்பன்

பல் பயம் பக்கம்
பகல் பலம் பட்டம்
படம் பலர் பந்தல்
பணம் பழம் பள்ளம்

மண் மணம் மச்சம்
மலர் மனம் மஞ்சள்
மணல் மக்கள் மன்னன்
மரம் மறவன் மத்தளம்
மடல் மன்றம் மயக்கம்

வடம் வலம் வட்டம்
வயல் வளம் வண்ணம்
வரம் வனம் வற்றல்

## உயிர் மெய் எழுத்துகள்

**ஆ - வரிசை எழுத்துகள்**

| | | | |
|---|---|---|---|
| கா | ஙா | சா | ஞா |

| | | | |
|---|---|---|---|
| டா | ணா | தா | நா |

| | | | | |
|---|---|---|---|---|
| பா | மா | யா | ரா | லா |

| | | | | |
|---|---|---|---|---|
| வா | ழா | ளா | றா | னா |

**கீழுள்ள எழுத்துகளைப் படி:**

| | | | | |
|---|---|---|---|---|
| ணா | கா | ஙா | மா | ழா |
| பா | ரா | வா | சா | தா |
| ஞா | நா | னா | ளா | லா |
| | யா | றா | டா | |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

**தெளிவாக உச்சரித்துப் பழகு :**

### ழி

| | |
|---|---|
| வழி - விழி | எழில் - பொழில் |
| அழி - ஆழி | தோழன் - தோழி |
| கழிவு - அழிவு | கிழித்தல் - பழித்தல் |

கழித்தல் - அழித்தல் - ஒழித்தல்

குழி - கழி - கிழி - கோழி

சுழி - பழி - தாழி - மொழி

### ழை

அழை - மழை - பிழை - வாழை

உழைப்பு - அழைப்பு - பிழைப்பு

கற்றாழை - செவ்வாழை

### ழ்

| | |
|---|---|
| சூழ்ச்சி - வீழ்ச்சி | வாழ்வு - தாழ்வு |
| தமிழ் - தமிழ்நாடு | மகிழ் - மகிழ்ச்சி |
| இதழ் - நாளிதழ் | வாழ்க - வாழ்க்கை |
| தாழ் -தாழ்ப்பாள் | புகழ் - புகழ்ச்சி |

**ழ - வரிசை எழுத்துகள்**

| | | | |
|---|---|---|---|
| ழ | ழா | ழி | ழீ |
| ழு | ழூ | ழெ | ழே |
| ழை | ழொ | ழோ | ழௌ |

**தெளிவாக உச்சரித்துப் பழகு :**

**ழ**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பழகு | - அழகு | கிழமை | - பழமை | | |
| கழனி | - பழனி | அழகன் | - அழகி | | |
| கிழவி | - குழவி | பேரழகன் | - பேரழகி | | |
| கிழவன் | - உழவன் | முழங்கு | - கிழங்கு | | |
| வழக்கு | - பழக்கு | இழப்பு | - குழப்பு | | |
| பழம் | - ஆழம் | - முழம் | | | |
| குழல் | - சூழல் | - சுழல் | - ஊழல் | | |
| பழக்கம் | - வழக்கம் | - புழக்கம் | - முழக்கம் | | |

**ழா**

குழாய் திருவிழா விழா

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| காய் | காயம் | காவல் |
| கால் | காரம் | காந்தம் |
| காகம் | காலம் | காந்தன் |
| சாதம் | சாணம் | ஞானம் |
| சாபம் | சாம்பார் | ஞாலம் |
| தாய் | தாகம் | தாளம் |
| தான் | தாயம் | தாத்தா |
| தார் | தானம் | தாராளம் |
| நாய் | நான் | நாம் |
| நார் | நாடா | நாங்கள் |
| நாள் | நாகம் | நாடகம் |
| பால் | பாதம் | பாடல் |
| பாய் | பாரம் | பாடம் |
| பாகம் | பாலம் | பாயசம் |
| மான் | மாதம் | மாடம் |
| மாமா | மானம் | மாங்காய் |

## படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | |
|---|---|---|
| வாய் | வாசம் | வாசல் |
| வால் | வாரம் | வானம் |

| | | |
|---|---|---|
| பட்டா | கண்ணா | ஓணான் |

**முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் படி :**

| | |
|---|---|
| அரம் - ஆரம் | மனம் - மானம் |
| அவல் - ஆவல் | நகம் - நாகம் |
| உண் - ஊண் | நட்டம் - நாட்டம் |
| கல் - கால் | தனம் - தானம் |
| பல் - பால் | கரம் - காரம் |
| நம் - நாம் | வரம் - வாரம் |
| கண் - காண் | தளம் - தாளம் |
| படம் - பாடம் | தரம் - தாரம் |
| மடம் - மாடம் | சமம் - சாமம் |
| வனம் - வானம் | பலம் - பாலம் |

**ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் ஒரு எழுத்தை எடுத்து சொல்லை உருவாக்குக:**

| முதல் எழுத்து | இரண்டாம் எழுத்து | மூன்றாம் எழுத்து |
|---|---|---|
| க, ம, த, பா, சா, வா, ஆ | ட, ன, த, வ, ர, க, ய, ண | ம், ல், ர், ன் |

## மதிப்பீட்டு பக்கம்

**1. கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளில்,**

- *ஆ - வரிசை எழுத்துகளை வட்டமிட்டு காட்டவும்.*
- *எ - வரிசை எழுத்துகளை சதுரம் வரைந்து காட்டவும்.*
- *ஐ - வரிசை எழுத்துகளை முக்கோணம் வரைந்து காட்டவும்.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ழை | டா | நை | வெ | தா | னெ |
| செ | ஙா | ளெ | றா | லெ | ணை |
| மை | கா | ஞை | யெ | பா | ரை |

**2. கீழுள்ள சொற்களை அகர வரிசையில் எழுதவும்:**

மூங்கில், மயக்கம், முத்து, மொழி,
மெத்தை, மீனவன், மையம், மாநிலம்,
மேகம், மௌனம், மிட்டாய், மோதிரம்

**3. கட்டத்தில் மறைந்துள்ள பறவைகளைக் கண்டுபிடி:**

| | | | | |
|---|---|---|---|---|
| க | ழு | கு | ரு | வி |
| வ | ம | யி | ல் | கி |
| சே | வ | ல் | கா | ளி |
| ர | மை | னா | க | பு |
| அ | ன் | ன | ம் | றா |

*4.* **சொல்வதை எழுதுக:** ***(வேறு சொற்களையும் பயன்படுத்திக் கொள்ளவும்)***

1. கைப்பந்து
2. வைகாசி
3. தொண்டை
4. மொட்டு
5. கோபுரம்
6. சோதனை
7. பௌர்ணமி
8. மாங்காய்
9. சீத்தாப்பழம்
10. முதலாளி

**5. கீழுள்ள தொடர்களைப் படி:**

1. உழைப்பே உயர்வு.
2. ஒற்றுமையே வலிமை.
3. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
4. நேர்மையே சிறந்த கொள்கை.
5. தன்னம்பிக்கையே உன்னை உயர்த்தும்.
6. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
7. ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்.

### படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | | |
|---|---|---|---|
| 13 | பாராட்டு | ஆவேசம் | நூற்றாண்டு |
| | கொய்யாப்பழம் | நடைபாதை | குடிநீர் |
| | அகராதி | சப்பாத்தி | பேராசை |
| | தாலாட்டு | பச்சைமிளகாய் | கற்பூரம் |

| | | | |
|---|---|---|---|
| 14 | கானல்நீர் | கோமாளி | இருப்புப்பாதை |
| | கறிவேப்பிலை | நெசவாளர் | மழைக்காலம் |
| | சுற்றுச்சூழல் | அங்காடி | புத்திசாலி |
| | போராட்டம் | பேரூராட்சி | பொம்மலாட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 15 | சமுதாயம் | உயர்நீதிமன்றம் | பச்சோந்தி |
| | ஆண்டுவிழா | சமன்பாடு | எதிர்ச்சொல் |
| | நவராத்திரி | குங்குமப்பூ | அங்கீகாரம் |
| | கொண்டாட்டம் | எழுத்தாளர் | பிரகாசம் |

| | | | |
|---|---|---|---|
| 16 | உலோகம் | படைவீரர் | சுற்றுலா |
| | தாய்நாடு | ஏமாற்றம் | நகராட்சி |
| | பைந்தமிழ் | சுரைக்காய் | உபதேசம் |
| | கரையான் | நெம்புகோல் | தாழ்ப்பாள் |

### உயிர் மெய் எழுத்துகள்

**இ - வரிசை எழுத்துகள்**

| | | | |
|---|---|---|---|
| கி | ஙி | சி | ஞி |

| | | | |
|---|---|---|---|
| டி | ணி | தி | நி |

| | | | | |
|---|---|---|---|---|
| பி | மி | யி | ரி | லி |

| | | | | |
|---|---|---|---|---|
| வி | ழி | ளி | றி | னி |

**கீழுள்ள எழுத்துகளைப் படி:**

| | | | |
|---|---|---|---|
| யி | மி | நி | னி |
| பி | ழி | தி | ரி |
| சி | ளி | லி | வி |
| ணி | கி | றி | டி |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

### படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | |
|---|---|---|
| கிளி | கிழவி | கிராமம் |
| கிரி | கிண்ணம் | கிண்கிணி |
| சிரி | சித்தி | சிங்கம் |
| சினம் | சின்னம் | சிலந்தி |
| திரி | தினம் | திரவம் |
| திப்பி | திட்டம் | திங்கள் |
| நிலா | நிறம் | நிலம் |
| நில் | நிழல் | நிமிடம் |
| பிடி | மிதி | அபிநயம் |
| பிதா | மிதியடி | தமிழ் |
| பிரி | மின்னல் | அம்மி |
| வில் | விரல் | வியாழன் |
| விழா | விக்கல் | வியாபாரி |
| விழி | விமானம் | விவசாயி |
| கரடி | வண்டி | வட்டி |
| கரண்டி | பட்டி | வடிகட்டி |
| கடிதம் | கட்டில் | பட்டியல் |

### படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | | |
|---|---|---|---|
| 9 | புல்லாங்குழல் | பூங்கா | புராணம் |
| | சூரியகாந்தி | சூறாவளி | செந்நீர் |
| | பாகற்காய் | பாலூட்டி | பாதுகாவல் |
| | அமாவாசை | அழிப்பான் | அரிவாள் |

| | | | |
|---|---|---|---|
| 10 | தற்காப்பு | கற்காலம் | தாத்தா |
| | செய்தித்தாள் | செவ்வாய் | செவ்வாழை |
| | சூத்திரம் | பாராட்டு | பாலாடை |
| | துரோகம் | தேநீர் | தேங்காய் |

| | | | |
|---|---|---|---|
| 11 | பொறியாளர் | பொற்காசு | பொற்காலம் |
| | தொழிலாளி | தொழிற்சாலை | தொற்றுநோய் |
| | பழத்தோட்டம் | பள்ளிக்கூடம் | பன்னீர் |
| | நாடகமேடை | நாடோடி | நிகழ்காலம் |

| | | | |
|---|---|---|---|
| 12 | நீரோடை | நீர்நாய் | நீர்யானை |
| | மணமேடை | மலர்க்காம்பு | மக்களாட்சி |
| | நுரையீரல் | நுழைவாயில் | நூற்பாலை |
| | பட்டுநூல் | பண்பாடு | பலகாரம் |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | | |
|---|---|---|---|
| 5 | அபாயம் | அரசாங்கம் | அமாவாசை |
| | கடப்பாறை | கட்டுக்கோப்பு | கத்தரிக்கோல் |
| | பெருங்காயம் | பெருமூளை | பெற்றோர் |
| | கம்பளிப்பூச்சி | கரப்பான்பூச்சி | கழிவுநீர் |

| | | | |
|---|---|---|---|
| 6 | தேன்கூடு | தொலைக்காட்சி | தொலைதூரம் |
| | ஆர்ப்பாட்டம் | இடிதாங்கி | ஆரவாரம் |
| | எதிரொலி | எதிரொளி | எதிர்காலம் |
| | குண்டூசி | குருவிக்கூடு | குழாய் |

| | | | |
|---|---|---|---|
| 7 | குறிக்கோள் | கூலியாள் | கூடாரம் |
| | கூரைவீடு | கையேடு | கெண்டைமீன் |
| | உச்சநீதிமன்றம் | உமிழ்நீர் | இரும்பாலை |
| | தக்காளி | தங்கக்காசு | தச்சுவேலை |

| | | | |
|---|---|---|---|
| 8 | ஊறுகாய் | ஊன்றுகோல் | எடுத்துக்காட்டு |
| | பிறந்தநாள் | புள்ளிமான் | பிள்ளையார் |
| | சாம்பார் | சிறுசேமிப்பு | சிறுநீரகம் |
| | நீர்வீழ்ச்சி | நுகர்வோர் | நுண்ணோக்கி |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| எலி | மல்லி | இட்டலி |
| அல்லி | ஒலி | திப்பிலி |
| ஒளி | வளி | களிமண் |
| கிளி | பள்ளி | கிளிஞ்சல் |
| பயிர் | ஆயிரம் | உயில் |
| தயிர் | மயில் | பயிற்சி |
| நரி | வரி | கத்தரி |
| மந்திரி | அரிசி | விரிசல் |
| சிரி | பிடரி | சரித்திரம் |
| ஆனி | பனி | நந்தினி |
| கனி | கழனி | பட்டினி |
| பணி | கணினி | ஏணி |
| பிணி | ஆணி | வணிகம் |
| விழி | வழி | கழி |
| கிழி | பிழி | எழில் |
| விசிறி | அறிஞர் | அறிவியல் |
| சிறிய | அன்றில் | ஞிமிர் |

**சொற் பொருள்:**

*ஞிமிர் - ஒலி*

## உயிர் மெய் எழுத்துகள்

**ஈ - வரிசை எழுத்துகள்**

| | | | |
|---|---|---|---|
| கீ | ஙீ | சீ | ஞீ |

| | | | |
|---|---|---|---|
| டீ | ணீ | தீ | நீ |

| | | | | |
|---|---|---|---|---|
| பீ | மீ | யீ | ரீ | லீ |

| | | | | |
|---|---|---|---|---|
| வீ | ழீ | ளீ | றீ | னீ |

**கீழுள்ள எழுத்துகளைப் படி:**

| | | | |
|---|---|---|---|
| ழீ | யீ | சீ | தீ |
| டீ | நீ | வீ | னீ |
| றீ | கீ | பீ | லீ |
| மீ | ளீ | ரீ | ணீ |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

### படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | | |
|---|---|---|---|
| 1 | காண்டாமிருகம் | காவலாளி | காற்றோட்டம் |
| | அடமானம் | அடையாளம் | அதிகாலை |
| | கண்ணீர் | கத்தரிக்காய் | கலாச்சாரம் |
| | பொதுத்தேர்தல் | பொதுத்தேர்வு | போர்வீரன் |

| | | | |
|---|---|---|---|
| 2 | அறிவீனம் | ஆய்வாளர் | ஆணிவேர் |
| | ஒருமைப்பாடு | ஒலிநாடா | ஒளிச்சேர்க்கை |
| | பூந்தோட்டம் | பூரான் | பெண்பால் |
| | இடமாற்றம் | இடையூறு | ஆன்மீகம் |

| | | | |
|---|---|---|---|
| 3 | இடைத்தேர்தல் | உதாரணம் | இடைவெளி |
| | சமூகம் | சல்லிவேர் | சாப்பாடு |
| | கேள்வித்தாள் | கொத்தனார் | கொடியேற்றம் |
| | உரோமம் | உற்சாகம் | உயிர்த்தோழன் |

| | | | |
|---|---|---|---|
| 4 | உளவாளி | உழைப்பாளி | ஊராட்சி |
| | திசைக்காட்டி | துணைக்கோள் | துப்பாக்கி |
| | பொன்விழா | மாலைநேரம் | மிட்டாய் |
| | சதவீதம் | சுகாதாரம் | சுண்ணாம்பு |

**இடை எழுத்தை நீக்கிப் படி** :

| | | | |
|---|---|---|---|
| தண்டு | ஓடம் | கானல் | கடல் |
| பச்சை | பரிசு | தோண்டு | பஞ்சு |
| பலகை | பட்டு | ஆண்டு | ஆவணி |
| குருவி | குதிரை | குவலை | நண்டு |

| | | | |
|---|---|---|---|
| வண்டு | வாசல் | வள்ளி | கழுதை |
| கரடி | கழனி | கூண்டு | கொட்டு |
| தவளை | தவிடு | தட்டு | தொண்டை |
| கொண்டி | முட்டி | அவரை | கொண்டை |

| | | | |
|---|---|---|---|
| கொஞ்சு | கோட்டை | வெள்ளி | வீச்சு |
| விடுதி | வியாதி | வித்தை | தொண்டு |
| கோர்வை | தஞ்சை | திண்ணை | கொட்டை |
| பேச்சு | முசிறி | கட்டி | செல்வி |

| | | | |
|---|---|---|---|
| சான்று | சீர்மை | சண்டை | பூஞ்சை |
| மகுடி | கூண்டு | கூட்டு | வெற்றி |
| தாழ்வு | ஆலடி | கோபால் | பாட்டு |
| மத்து | மாற்று | புனல் | வாண்டு |

| | | | |
|---|---|---|---|
| ஆவடி | நிழல் | பார்வை | புள்ளி |
| காந்தி | மூட்டு | நெற்றி | கன்னி |
| குட்டி | கந்தை | கபடி | கள்ளி |
| குட்டை | சாட்டை | கானல் | காட்டு |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| கீரி | சீர் | தீனி |
| கீதா | சீரகம் | தீபம் |
| கீர்த்தி | சீயக்காய் | தீபாவளி |
| நீர் | மீன் | வீதி |
| நீளம் | மீனவன் | வீராணம் |
| நீலம் | மீனாட்சி | வீரம் |
| நீச்சல் | மீன்காரர் | வீக்கம் |
| பீரங்கி | கம்பீரம் | பீலி |
| திடீர் | படீர் | கண்டீர் |
| கல்லீரல் | சுரீர் | கண்ணீர் |
| லீலா | பாரீர் | மண்ணீரல் |
| பளீர் | அறியீர் | கற்றீர் |
| பன்னீர் | தண்ணீர் | விற்றீர் |

**முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் படி :**

| | |
|---|---|
| நிதி - நீதி | மிதி - மீதி |
| மின் - மீன் | விதி - வீதி |
| விண் - வீண் | நிலம் - நீலம் |
| நிலா - நீலா | விதம் - வீதம் |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அசல் | ஆடல் | இதம் | ஈசல் |
| | உடல் | ஊகம் | எமன் | ஏவல் |
| | ஐவர் | ஒயில் | ஓலம் | ஔளனம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | அச்சம் | ஆப்பம் | இன்னல் | ஈச்சம் |
| | உச்சம் | ஊக்கம் | எண்ணம் | ஏக்கம் |
| | ஐவனம் | ஒப்பம் | ஓட்டம் | ஔடதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | அடக்கம் | ஆரம்பம் | இரக்கம் | ஈர்த்தல் |
| | உறக்கம் | ஊர்வலம் | எண்பதம் | ஏகதாளம் |
| | ஐயப்பன் | ஒட்டகம் | ஓவாப்பிணி | ஔவியம் |

| | | | |
|---|---|---|---|
| 4 | அஞ்சலகம் | ஆலவட்டம் | இலக்கணம் |
| | உபகரணம் | ஊர்மன்றம் | ஏகவசனம் |
| | ஒட்டப்பந்தயம் | எயினர் | ஈச்சமரம் |

**சொற் பொருள்:**

*ஔளனம் - மிளகு ரசம்*
*ஐவனம் - மலை நெல்*
*ஈர்த்தல் - குளிர்ச்சியான*
*ஏகதாளம் - ஒரே ஒலி*
*ஓவாப்பிணி - மாறாத துன்பம்*
*ஏகவசனம் - ஒரே மொழி*

**முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் படி :**

எடு - ஏடு
எழு - ஏழு
சதி - சாதி
கவி - காவி
அழி - ஆழி
அறு - ஆறு
மது - மாது
மறு - மாறு
சட்டை - சாட்டை
கம்பு - காம்பு
பம்பு - பாம்பு
வண்டு - வாண்டு
ஒட்டு - ஓட்டு
சிட்டு - சீட்டு
சிதை - சீதை
சிறு - சீறு

**படித்துப் பழகு, எழுதிப் பழகு :**

| | | | |
|---|---|---|---|
| மல்லிகை | முல்லை | வல்லினம் | கல்லணை |

| | | | |
|---|---|---|---|
| வெள்ளை | உள்ளம் | வெள்ளி | தள்ளுபடி |

| | | | |
|---|---|---|---|
| கண்ணாடி | அண்ணன் | சுண்ணாம்பு | வெண்ணெய் |

| | | | |
|---|---|---|---|
| கன்னம் | மன்னன் | சின்னம் | அன்னை |

| | | | |
|---|---|---|---|
| காற்று | ஏற்றுமதி | ஆற்றல் | வெற்றிலை |

| | | | |
|---|---|---|---|
| கற்பனை | மற்போர் | நாட்குறிப்பு | நட்பு |
| அற்பம் | சிற்பம் | சாட்சி | மாட்சி |
| முற்பகல் | பிற்பகல் | நாட்கள் | நீட்சி |
| முயற்சி | முற்போக்கு | ஆட்கள் | காட்சி |
| பயிற்சி | விற்பனை | நட்சத்திரம் | ஆட்சி |

**முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் படி :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மடி | - | மாடி | வளி | - | வாளி |
| தடி | - | தாடி | கஞ்சி | - | காஞ்சி |
| நடி | - | நாடி | வஞ்சி | - | வாஞ்சி |
| பசி | - | பாசி | கட்டு | - | காட்டு |
| பரி | - | பாரி | பட்டு | - | பாட்டு |
| பழி | - | பாழி | சந்து | - | சாந்து |
| வசி | - | வாசி | வடு | - | வாடு |
| அணி | - | ஆணி | நடு | - | நாடு |
| வலி | - | வாலி | அடி | - | ஆடி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அலை | - | ஆலை | பனை | - | பானை |
| வடை | - | வாடை | வகை | - | வாகை |
| அடை | - | ஆடை | அசை | - | ஆசை |
| தடை | - | தாடை | அணை | - | ஆணை |
| கலை | - | காலை | களை | - | காளை |
| மலை | - | மாலை | கடை | - | காடை |
| பகை | - | பாகை | கதை | - | காதை |
| பறை | - | பாறை | முட்டை | - | மூட்டை |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு :**

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | கவனம் | காளான் | கிழி | கீதம் |
| | கஞ்சன் | காலரா | சிறிய | நீதி |
| | கண்ணன் | காவலர் | சிற்பி | பீதி |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | கணவன் | சாரம் | சினம் | பீடம் |
| | கட்டணம் | சாரல் | சிக்கல் | பீங்கான் |
| | கட்டடம் | சாதனம் | சிகரம் | மீனம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | கம்பளம் | தாரம் | சிம்மம் | வீழ்ச்சி |
| | சபதம் | தாவரம் | சிற்பம் | சீக்கிரம் |
| | சமயம் | நாசம் | சிரமம் | சீத்தாப்பழம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | சரணம் | நாற்றம் | திடம் | சீம்பால் |
| | சங்கமம் | நாட்டம் | தியாகி | நீதிபதி |
| | சம்பளம் | பாசனம் | தியானம் | நீர்வீழ்ச்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | சந்தனம் | மாற்றம் | திலகம் | நீதிமன்றம் |
| | தனம் | வாகனம் | நிதானம் | மீன்காரர் |
| | தவம் | காய்ச்சல் | நிர்வாகி | மீன்கள் |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு :**

| | | | |
|---|---|---|---|
| 10 | நட்டம் | சாதாரணம் | நிம்மதி |
| | நண்பகல் | தாராளம் | பிணி |
| | பரதம் | தாழ்வாரம் | பிசின் |

| | | | |
|---|---|---|---|
| 11 | பட்டணம் | தாழ்ப்பாள் | பிரியம் |
| | பவளம் | நாராயணன் | பிம்பம் |
| | பதக்கம் | பாரதம் | பின்னம் |

| | | | |
|---|---|---|---|
| 12 | பழக்கம் | பாய்மரம் | பின்னல் |
| | பந்தயம் | மாவட்டம் | மின்விசிறி |
| | பம்பரம் | நாணயம் | விமானி |

| | | | |
|---|---|---|---|
| 13 | பழங்கள் | மாநகரம் | மின்சாரம் |
| | மதம் | சிப்பாய் | விலாசம் |
| | மண்டலம் | பிரசாதம் | வினா |

| | | | |
|---|---|---|---|
| 14 | பஞ்சம் | பயணி | நிலக்கரி |
| | பயணம் | வள்ளி | நிச்சயம் |
| | மணமகன் | சரி | திகில் |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| கௌரி | கௌதமன் | கௌசல்யா |
| கௌதாரி | கௌளி | கௌரவர் |

| | | |
|---|---|---|
| பௌர்ணமி | மௌலி | சௌமியா |
| பௌத்தம் | மௌவல் | வௌவால் |
| பௌவம் | மௌனம் | ரௌத்திரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கைதட்டு | கொதிப்பு | கோதை | கௌரவம் |
| | நையாண்டி | கொட்டகை | கோலி | சௌக்கியம் |
| | கைப்பை | கொள்கை | கோகுலம் | கௌதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தொகுதி | கோமாளி | கௌரி | பொத்தான் |
| | தொகை | கோளாறு | கௌதமி | கொட்டு |
| | தொலைபேசி | சோறு | கௌசல்யா | கொத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வைதேகி | தொழிலாளி | தோற்றம் | கொய்யா |
| | வையம் | தொல்லை | நோக்கம் | கொத்தனார் |
| | நொச்சி | தொடர்பு | நோட்டம் | கொப்பளம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | சொர்க்கம் | நொறுக்கு | தொழிலாளி | தொடக்கம் |
| | பொன்வண்டு | போர் | தோண்டு | தோரணம் |
| | மோதல் | மோப்பம் | தோழி | தோட்டம் |

# உயிர் மெய் எழுத்துகள்

**ஔ - வரிசை எழுத்துகள்**

| | | | |
|---|---|---|---|
| கௌ | ஙௌ | சௌ | ஞௌ |

| | | | |
|---|---|---|---|
| டௌ | ணௌ | தௌ | நௌ |

| | | | | |
|---|---|---|---|---|
| பௌ | மௌ | யௌ | ரௌ | லௌ |

| | | | | |
|---|---|---|---|---|
| வௌ | ழௌ | ளௌ | றௌ | னௌ |

**கீழுள்ள எழுத்துகளைப் படி:**

| | | | |
|---|---|---|---|
| டௌ | பௌ | தௌ | றௌ |
| ழௌ | கௌ | ரௌ | ணௌ |
| சௌ | லௌ | மௌ | ளௌ |
| னௌ | வௌ | நௌ | யௌ |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

## மதிப்பீட்டு பக்கம்

1. **கட்டத்திலுள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்குக:** ***எ.கா:*** *கரம்*

| | | | |
|---|---|---|---|
| தா | க | ம் | ஆ |
| சி | ர | ன் | இ |
| வீ | ண | ள் | அ |
| ப | ன | ய | ழ |

2. **நடு எழுத்தை மாற்றி புதிய சொற்களை உருவாக்குக:**
   ***எ.கா:*** *அகல்* - *<u>அனல்</u>* - *<u>அவல்</u>*

   1. பணம் ……….. ………...
   2. காரம் ……….. ………...
   3. வாசம் ……….. ………...

3. **முதல் எழுத்தை மாற்றி புதிய சொற்களை உருவாக்குக:**
   ***எ.கா:*** *திட்டம் - வட்டம் - கட்டம்*

   1. வில் ……….. ………...
   2. நீலம் ……….. ………...
   3. விதி ……….. ………...

4. **சொல்வதை எழுதுக:** ***(வேறு சொற்களையும் பயன்படுத்திக் கொள்ளவும்)***

   1. நிமிடம்
   2. மாடம்
   3. மீனவன்
   4. இதயம்
   5. அஞ்சல்
   6. பந்தயம்
   7. சிங்கம்
   8. காளான்
   9. வண்ணம்
   10. தீபாவளி

5. **கீழுள்ள தொடர்களைப் படிக்க:**

   1. வண்டிச் சக்கரம்.
   2. அழகிய மயில்.
   3. உயர்ந்த உள்ளம்.
   4. நாட்டிய நாடகம்.
   5. மின் விளக்கின் ஒளி.
   6. நிகழ்ச்சி நிரல்.
   7. காய்கறி வியாபாரம்.
   8. கட்டண விவரம்.
   9. நீச்சல் அடி.
   10. சந்தன மரம்.

## உயிர் மெய் எழுத்துகள்

உ - வரிசை எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கு | ஙு | சு | ஞு |

| | | | |
|---|---|---|---|
| டு | ணு | து | நு |

| | | | | |
|---|---|---|---|---|
| பு | மு | யு | ரு | லு |

| | | | | |
|---|---|---|---|---|
| வு | ழு | ளு | று | னு |

கீழுள்ள எழுத்துகளைப் படி:

| | | | |
|---|---|---|---|
| பு | லு | து | ளு |
| ணு | கு | மு | டு |
| வு | மு | று | யு |
| னு | சு | நு | ரு |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

ஒலி வேறுபாடு அறிந்து படி :

| எ | ஒ |
|---|---|
| கெடு | கொடு |
| செக்கு | சொக்கு |
| செல் | சொல் |
| மெய் | மொய் |
| கெண்டி | கொண்டி |
| பெறு | பொறு |
| நெடி | நொடி |
| மெட்டு | மொட்டு |

| ஏ | ஓ |
|---|---|
| கேடு | கோடு |
| கேணி | கோணி |
| பேட்டி | போட்டி |
| பேரூர் | போரூர் |
| தேடு | தோடு |
| கேசம் | கோசம் |
| கேலி | கோலி |
| கேள் | கோள் |
| சேறு | சோறு |
| தேடு | தோடு |
| தேசம் | தோசம் |
| தேள் | தோள் |
| தேற்றம் | தோற்றம் |
| மேகம் | மோகம் |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| கோடி | கோழி | கோப்பை |
| கோடு | கோட்டை | கோயில் |
| கோடை | கோடரி | கோலம் |
| கோணி | கோபம் | கோபுரம் |
| சோழர் | சோளம் | சோறு |
| சோகம் | சோதனை | சோலை |
| தோசை | தோல் | தோழன் |
| தோடு | தோள் | தோப்பு |
| தோகை | தோல்வி | தோட்டம் |
| நோய் | போகி | மோர் |
| நோன்பு | போட்டி | மோப்பம் |
| நோயாளி | போர்வை | மோதிரம் |
| யோகி | யோகம் | யோகாசனம் |
| ரோமாபுரி | தேரோட்டம் | ஈரோடு |
| நல்லோர் | பாடுவோம் | தமிழோசை |
| கற்றோர் | சான்றோர் | பெற்றோர் |
| வெள்ளோட்டம் | கண்ணோட்டம் | மின்னோட்டம் |

**முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் படி :**

| | | | |
|---|---|---|---|
| கொட்டம் | கோட்டம் | கொடி | கோடி |
| கொள் | கோள் | கொடை | கோடை |
| கொல் | கோல் | தொடு | தோடு |
| கொடு | கோடு | தொகை | தோகை |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| குடி | குளி | குடல் |
| குரு | குச்சி | குயில் |
| குழி | குட்டி | குண்டு |
| குரல் | குளவி | குழம்பு |
| குருவி | கும்பல் | குழாய் |
| குளம் | குயவர் | குறிஞ்சி |
| குளிர் | குரங்கு | குறும்பு |
| சுகம் | சுருள் | சுத்தம் |
| சுத்தி | சுவர் | சுலபம் |
| சுருக்கம் | சுவடி | சுவாசம் |
| சுழல் | சுண்டல் | சுற்று |
| யுகம் | யுவன் | யுத்தம் |
| நுனி | நுதல் | நுண்ணுயிர் |
| நுங்கு | நுணல் | நுணுக்கம் |

## படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | |
|---|---|---|
| துணி | துண்டு | துளிர் |
| துளி | தும்பி | துடுப்பு |
| துரு | துளசி | தும்மல் |

| | | |
|---|---|---|
| புண் | புத்தி | புற்று |
| புல் | புதன் | புனல் |
| புவி | புதர் | புத்தர் |
| புலி | புயல் | புருவம் |
| புழு | புள்ளி | புளிப்பு |

| | | |
|---|---|---|
| முடி | முயல் | முதலாளி |
| முகம் | முழம் | முந்திரி |
| முத்து | முறம் | முப்பது |
| முதுகு | முக்காலி | முருகன் |

| | | |
|---|---|---|
| எடு | வண்டு | கரடு |
| வடு | ஆண்டு | நடுவர் |
| பிட்டு | சீட்டு | விடுதி |

| | | |
|---|---|---|
| அணு | மண்ணுலகு | உண்ணுதல் |

## உயிர் மெய் எழுத்துகள்

**ஓ - வரிசை எழுத்துகள்**

| | | | |
|---|---|---|---|
| கோ | ஙோ | சோ | ஞோ |
| டோ | ணோ | தோ | நோ |

| | | | | |
|---|---|---|---|---|
| போ | மோ | யோ | ரோ | லோ |
| வோ | ழோ | ளோ | றோ | னோ |

**கீழுள்ள எழுத்துகளைப் படி:**

| | | | |
|---|---|---|---|
| லோ | டோ | ளோ | போ |
| ரோ | மோ | சோ | னோ |
| கோ | தோ | வோ | றோ |
| நோ | ழோ | யோ | ணோ |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| கொசு | கொக்கு | கொடுக்கு |
| கொடி | கொட்டை | கொடுமுடி |
| கொடை | கொண்டை | கொலுசு |
| கொய்யா | கொம்பு | கொழுப்பு |
| கொக்கி | கொஞ்சம் | கொள்ளு |
| சொல் | தொடு | தொண்டை |
| சொட்டு | தொடை | தொப்பி |
| சொத்து | தொங்கு | தொழில் |
| சொந்தம் | தொட்டி | தொட்டில் |
| நொடி | நொய் | நொச்சி |
| பொடி | பொம்மை | பொரியல் |
| பொய் | பொருள் | பொறுக்கு |
| பொன் | பொழுது | பொழில் |
| பொறி | பொன்னி | பொறுமை |
| பொந்து | பொங்கல் | பொறாமை |
| மொழி | மொத்தம் | மொட்டு |
| ரொட்டி | சுவரொட்டி | எதிரொலி |
| தனியொருவர் | உள்ளொளி | மின்னொலி |
| நல்லொழுக்கம் | புகழொளி | கண்ணொளி |
| நிலவொளி | வானொலி | மற்றொன்று |

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| பரு | பருப்பு | துரும்பு |
| கருவி | உருக்கு | கரும்பு |
| அரும்பு | திருடன் | உருவம் |
| தீவு | கழிவு | ஓய்வு |
| ஈவு | துணிவு | தீர்வு |
| கதவு | உணவு | பதிவு |
| ஏழு | புழு | எழுத்து |
| இழு | கழுகு | கழுத்து |
| குழு | விழுது | விழுப்புரம் |
| கிள்ளு | தள்ளு | வள்ளுவர் |
| ஆறு | கிணறு | எறும்பு |
| ஈறு | கன்று | சிறுவன் |
| அறு | குன்று | அறுபது |
| புற்று | முறுக்கு | வயிறு |
| புனுகு | மனுநீதி | அவனுக்கு |

## உயிர் மெய் எழுத்துகள்

ஊ - வரிசை எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கூ | ஙூ | சூ | ஞூ |
| டூ | ணூ | தூ | நூ |

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | மூ | யூ | ரூ | லூ |
| வூ | ழூ | ளூ | றூ | னூ |

கீழுள்ள எழுத்துகளைப் படி:

| | | | |
|---|---|---|---|
| சூ | ரூ | நூ | டூ |
| ளூ | கூ | பூ | லூ |
| தூ | வூ | றூ | மூ |
| யூ | னூ | ணூ | ழூ |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

## உயிர் மெய் எழுத்துகள்

ஓ - வரிசை எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கோ | ஙோ | சோ | ஞோ |
| டோ | ணோ | தோ | நோ |

| | | | | |
|---|---|---|---|---|
| போ | மோ | யோ | ரோ | லோ |
| வோ | ழோ | ளோ | றோ | னோ |

கீழுள்ள எழுத்துகளைப் படி:

| | | | |
|---|---|---|---|
| சோ | ழோ | மோ | றோ |
| ரோ | வோ | டோ | லோ |
| தோ | போ | ளோ | ணோ |
| கோ | யோ | நோ | னோ |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| கடை | வடை | சண்டை |
| குடை | படை | மூட்டை |
| கூடை | ஆடை | சட்டை |
| மஞ்ஞை | நையாண்டி | |
| அணை | வீணை | திண்ணை |
| ஆணை | கருணை | பண்ணை |
| கீரை | இரை | குதிரை |
| நாரை | குரை | சித்திரை |
| அரை | தாமரை | முத்திரை |
| ஓலை | ஆலை | தலை |
| விலை | குலை | கவலை |
| மாலை | சிலை | இல்லை |
| இழை | ஏழை | தழை |
| அழை | மழை | கற்றாழை |
| வாழை | கழை | உழைப்பு |
| காளை | தவளை | வெள்ளை |
| கிளை | வளையல் | விளையாட்டு |
| அறை | சிறை | கறை |
| பூனை | யானை | அன்னை |
| பானை | தென்னை | சாதனை |

**சொற் பொருள்:**
*மஞ்ஞை - மயில்*

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| கூடு | கூத்து | கூட்டல் |
| கூவு | கூம்பு | கூந்தல் |
| கூட்டு | கூச்சல் | கூடாரம் |
| கூண்டு | கூட்டம் | கூட்டாளி |
| சூடு | தூசு | தூரம் |
| சூசகம் | தூண் | தூக்கம் |
| சூடாமணி | தூள் | தூண்டில் |
| நூல் | நூறு | நூபுரம் |
| பூங்கா | பூச்சி | பூட்டு |
| பூமி | பூசணி | பூண்டு |
| பூரி | பூசாரி | பூரான் |
| மூடி | மூன்று | மூட்டு |
| மூடு | மூச்சு | மூங்கில் |
| மூக்கு | மூடுபனி | மூர்த்தி |
| தகடூர் | காட்டூர் | மண்டூர் |

**சொற் பொருள்:**
*நூபுரம் - சிலம்பு*

## படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | |
|---|---|---|
| யூகம் | ரூபாய் | கடலூர் |
| யூகி | அரூர் | வல்லூறு |
| அந்தியூர் | கரூர் | சூலூர் |
| வடுவூர் | புகழூர் | உள்ளூர் |
| வழுவூர் | ஏழூர் | திருவள்ளூர் |
| மணவூர் | பழூர் | புகளூர் |
| கற்றூண் | ஆனூர் | எண்ணூர் |
| ஆற்றூர் | கீரனூர் | எண்ணூறு |
| சிற்றூர் | கண்ணனூர் | கண்ணூர் |

**முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் படி :**

| | | | |
|---|---|---|---|
| குடல் | - கூடல் | முடி | - மூடி |
| குடம் | - கூடம் | குத்து | - கூத்து |
| சுடு | - சூடு | துண்டு | - தூண்டு |
| குடி | - கூடி | முட்டு | - மூட்டு |

**ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் ஒரு எழுத்தை எடுத்து சொல்லை உருவாக்குக:**

| முதல் எழுத்து | இரண்டாம் எழுத்து | மூன்றாம் எழுத்து |
|---|---|---|
| உ, ஊ, கு, கூ, சு, பு, மு, மூ | ட், ட, ர, வ, ன், ண் | ம், டு, டி, ல், று |

## படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | |
|---|---|---|
| கை | தங்கை | கூகை |
| கையேடு | வாடகை | புகை |
| கைப்பந்து | வேடிக்கை | முழங்கை |
| கைமாறு | கங்கை | காணிக்கை |
| சைகை | ஓசை | பிச்சை |
| சைவம் | பூசை | இசை |
| ஆசை | பசை | வரிசை |
| மீசை | பச்சை | எலுமிச்சை |
| தை | ஆந்தை | கழுதை |
| தையல் | சிறுத்தை | விதை |
| தைலம் | மந்தை | கதை |
| தைரியம் | விந்தை | தந்தை |
| தைப்பூசம் | கவிதை | அத்தை |
| பைரவி | பைங்கொடி | அகப்பை |
| மை | மைதானம் | கடமை |
| மைசூர் | செம்மை | உண்மை |
| மைதா | வறுமை | ஆமை |
| மைல் | பெருமை | சுமை |
| வைகறை | வைரம் | தேவை |
| வைகாசி | வைகை | அவை |
| வையம் | வைக்கோல் | சேவை |

## உயிர் மெய் எழுத்துகள்

ஐ - வரிசை எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கை | ஙை | சை | ஞை |
| டை | ணை | தை | நை |

| | | | | |
|---|---|---|---|---|
| பை | மை | யை | ரை | லை |
| வை | ழை | ளை | றை | னை |

கீழுள்ள எழுத்துகளைப் படி:

| | | | |
|---|---|---|---|
| நை | ணை | ரை | ழை |
| டை | ளை | சை | னை |
| யை | வை | தை | பை |
| கை | மை | றை | லை |

குறிப்பு: *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

## உயிர் மெய் எழுத்துகள்

எ - வரிசை எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கெ | ஙெ | செ | ஞெ |
| டெ | ணெ | தெ | நெ |

| | | | | |
|---|---|---|---|---|
| பெ | மெ | யெ | ரெ | லெ |
| வெ | ழெ | ளெ | றெ | னெ |

கீழுள்ள எழுத்துகளைப் படி:

| | | | |
|---|---|---|---|
| லெ | மெ | ளெ | றெ |
| கெ | னெ | யெ | நெ |
| தெ | ழெ | வெ | செ |
| பெ | டெ | ரெ | ணெ |

குறிப்பு: *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

## படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | |
|---|---|---|
| கெண்டி | கெழுத்தி | கெடுதல் |
| செடி | செலவு | செவ்வாய் |
| செவி | செங்கல் | செழிப்பு |
| செம்பு | செம்மண் | செக்கு |
| செய்தி | செருப்பு | ஞெகிலம் |
| தெரு | தெற்கு | தெப்பம் |
| நெடி | நெல் | நெகிழி |
| நெய் | நெசவு | நெருப்பு |
| பெண் | பெயர் | பெருவிரல் |
| மெட்டு | வெடி | வெள்ளி |
| மெய் | வெந்தயம் | வெப்பம் |
| மெழுகு | வெயில் | வெல்லம் |
| மெருகு | வெற்றி | வெட்டுக்கிளி |
| கட்டெறும்பு | எண்ணெய் | மெய்யெழுத்து |
| சட்டென்று | வெண்ணெய் | ஐயெட்டு |
| வீடெங்கும் | கண்ணெதிரில் | காயெல்லாம் |
| ரெட்டியூர் | நாலெட்டு | சுள்ளெறும்பு |
| யாரென்று | லெனின் | சிற்றெறும்பு |
| ஊரெங்கும் | ஏழெட்டு | ஆறெட்டு |
| கல்லெழுத்து | முள்ளெலும்பு | ஏனென்று |

**சொற் பொருள்:**
*ஞெகிழம் - பொற்சிலம்பு*

## மதிப்பீட்டு பக்கம்

1. **விடுபட்ட எழுத்தை எழுதுக:**
   1. பு….ல்
   2. குட…..
   3. விர…..
   4. …..ங்காய்
   5. நாட…..ம்
   6. நீச்…..ல்
   7. ஆ…..மரம்
   8. தூண்…..ல்
   9. …..ருப்பு
   10. கூ......டு

2. **மறைந்துள்ள விலங்குகளைக் கண்டுபிடி:**
   **எ.கா:** *ய மு ல்- முயல்*
   1. கு ங் ர கு ……………………..
   2. ம் சி க ங் ……………………..
   3. ட் ட ஒ ம் க ……………………..
   4. ன் றி ப ……………………..
   5. ம் பா பு ……………………..

3. **குறிலை நெடிலோடு கோடிட்டு பொருத்துக:**
   1. நகம் - ஆரம்
   2. மிதி - கூடம்
   3. குடம் - நாகம்
   4. பெட்டி - மீதி
   5. அரம் - பேட்டி

4. **சொல்வதை எழுதுக:** ***(வேறு வார்த்தைகளையும் பயன்படுத்திக் கொள்ளவும்)***
   1. குடும்பம்
   2. செங்கல்
   3. வேம்பு
   4. மூக்கு
   5. தூக்கம்
   6. காந்தம்
   7. பந்தல்
   8. விமானம்
   9. வியாபாரம்
   10. இளவரசன்

5. **கீழுள்ள தொடர்களைப் படி:**
   1. அழகின் சிரிப்பு.
   2. தங்கும் விடுதி.
   3. குயில் கூவியது.
   4. வண்ணத்துப்பூச்சி பறந்தது.
   5. மேகக் கூட்டம் நகர்ந்தது.

## படித்துப் பழகு, எழுதிப் பழகு

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | முற்றம் | மூக்குத்தி | மெட்டி | மேய்ச்சல் |
| | முன்பனி | மூதாட்டி | மெல்லினம் | மேச்சேரி |
| | முடிச்சு | மூஞ்சூறு | மெய்யறிவு | மேதாவி |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | சுற்றம் | பூச்சாண்டி | புரதம் | முட்டி |
| | சுளுக்கு | பூட்டுசாவி | புலவர் | முக்கால் |
| | சுழல் | மூட்டு | மிதியடி | துடிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | பூக்கட்டு | புரட்சி | முகவரி | முற்றம் |
| | பூகம்பம் | முழு | முக்காலி | முன்பனி |
| | துன்பம் | முடிவு | முடிச்சு | குழவி |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | குழப்பம் | குடும்பம் | குங்குமம் | குளம்பு |
| | குடியரசு | குள்ளநரி | குளிர்ச்சி | சுண்ணாம்பு |
| | தேர்தல் | பூந்தி | சுதந்திரம் | சுமங்கலி |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | சுந்தரம் | சுற்றுப்புறம் | துவர்ப்பு | துவக்கம் |
| | புதிய | முக்கனி | புறம் | புளியமரம் |
| | சுண்டுவிரல் | புத்தகம் | புத்தாண்டு | புத்திசாலி |

## உயிர் மெய் எழுத்துகள்

**ஏ - வரிசை எழுத்துகள்**

| | | | |
|---|---|---|---|
| கே | ஙே | சே | ஞே |

| | | | |
|---|---|---|---|
| டே | ணே | தே | நே |

| | | | | |
|---|---|---|---|---|
| பே | மே | யே | ரே | லே |

| | | | | |
|---|---|---|---|---|
| வே | ழே | ளே | றே | னே |

**கீழுள்ள எழுத்துகளைப் படி:**

| | | | |
|---|---|---|---|
| தே | யே | ளே | ரே |
| லே | பே | றே | கே |
| நே | சே | வே | ணே |
| னே | டே | மே | ழே |

**குறிப்பு:** *எழுத்துகளைக் கிடைமட்டமாகவும் நெடுக்குவாட்டிலும் படிக்கச் சொல்லி மதிப்பிடவும்.*

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | |
|---|---|---|
| கேள் | கேளிர் | கேசரி |
| சேரன்<br>சேலம் | சேவல்<br>சேமிப்பு | சேமியா<br>சேறு |
| தேடு<br>தேதி<br>தேன் | தேர்<br>தேள்<br>தேனீ | தேக்கு<br>தேர்வு<br>தேங்காய் |
| நேர்<br>நேரு | நேரம்<br>நேற்று | நேயம்<br>நேர்வழி |
| பேன்<br>பேச்சு | பேட்டி<br>பேகன் | பேரன்<br>பேருந்து |
| மேகம்<br>மேலே | மேளம்<br>மேற்கு | மேட்டூர்<br>மேம்பாலம் |
| வேல்<br>வேர்<br>வேட்டி | வேலி<br>வேட்டு<br>வேடன் | வேகம்<br>வேம்பு<br>வேண்டும் |
| சாப்பிட்டேன்<br>கண்ணே<br>வெளியே | ரேவதி<br>பாலேடு<br>உள்ளே | கற்றேன்<br>வென்றேன்<br>முன்னேறு |

**முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் படி :**

செய் - சேய்
வெட்டு - வேட்டு
பெண் - பேண்

கெடு - கேடு
வெல் - வேல்
பெட்டி - பேட்டி

**படித்துப் பழகு, எழுதிப் பழகு**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குணம் | கூட்டணி | கெடு | கேணி |
| | கும்மி | கூடுதல் | கெட்டி | கேள்வி |
| | குமாரி | கூச்சல் | கெட்டது | கேலி |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | சுவடு | சூடம் | செய்யுள் | சேதாரம் |
| | சுபம் | சூழ்ச்சி | செவுள் | சேர்மம் |
| | சுரபி | சூரியகாந்தி | செயல் | சேகரிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | துயில் | தூது | தென்றல் | தேர்வீதி |
| | துகள் | தூறல் | தெப்பம் | தேசம் |
| | துயரம் | தூவு | தெருக்கூத்து | தேர்ச்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | நுட்பம் | நூலகம் | நெய்தல் | நேர்முகம் |
| | நுணுக்கம் | நூலறிவு | நெஞ்சம் | நேர்மை |
| | நுகத்தடி | நூறு | நெரிசல் | நேர்த்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | புகழ் | பூரணி | பெட்டி | பேரழிவு |
| | புதிர் | பூபதி | பெட்டகம் | பேரிடி |
| | புங்கமரம் | பூரிப்பு | பெரியது | பேதைமை |